# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.27/2022** **நாள்: 08.07.2022**

**<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்பேரில் பணிமேற்கொள்ளும்போது இறந்துபோன ஒப்பந்தத் தொழிலாளர்கள் இரண்டு பேரின் குடும்பத்தினருக்கு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் சார்பில் தலா ரூ.15 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.30 இலட்சத்திற்கான நிவாரணத் தொகை காசோலையினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் இன்று (08.07.2022) தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்பேரில் பணி மேற்கொள்ளும்போது இறந்துபோன ஒப்பந்தத் தொழிலாளர்கள் இரண்டு பேரின் குடும்பத்தினருக்கு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் சார்பில் தலா ரூ.15 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.30 இலட்சத்திற்கான நிவாரணத் தொகைக்கான காசோலையினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் இன்று (08.07.2022) தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய ஒப்பந்த தொழிலாளர்கள் 28.06.2022 அன்று காலை முதல் ஜெட் ராடிங் மற்றும் சூப்பர் சக்கர் இயந்திரத்தைப் பயன்படுத்தி மாதவரம் முத்துமாரியம்மன் கோயில் தெருவில் கழிவுநீர் அடைப்பை அகற்றும் பணியில் ஈடுபட்டு வந்தனர். அப்போது, பிற்பகல் சுமார் 2.30 மணியளவில் ஒப்பந்தத் தொழிலாளர் திரு.நெல்சன் என்கிற கட்டாரி (வயது - சுமார் 26), இயந்திர துளையில் ஏதேனும் கல்/துணி அடைக்கப்பட்டிருக்கிறதா என்று சாலையில் நின்று கவனித்தபோது, இயந்திர துளையில் எதிர்பாராத விதமாக தவறி விழுந்து விட்டார். அவரைக் காப்பாற்ற முயன்ற ஒப்பந்த தொழிலாளர் திரு.வே.ரவிகுமார் (வயது - சுமார் 35) என்பவரும் இயந்திர துளையில் விழுந்து விட்டார். உடனடியாக தீயணைப்புத் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு இருவரும் உயிருடன் மீட்கப்பட்டு ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதில் ஒப்பந்தத் தொழிலாளர், நெல்சன் என்கிற கட்டாரி என்பவர் சிகிச்சை பலனின்றி 28.06.2022 அன்று இறந்துவிட்டார்.

இந்நிலையில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தொடர் சிகிச்சை பெற்றுவந்த ஒப்பந்த தொழிலாளர் திரு.வே.ரவிகுமார் என்பவரும் சிகிச்சை பலனின்றி 30.06.2022 அன்று காலை உயிரிழந்தார். உயிரிழந்த ஒப்பந்த தொழிலாளர்கள் (1)திரு.நெல்சன் என்கிற கட்டாரி (வயது சுமார்-26) மற்றும் (2)திரு.வே.ரவிகுமார் (வயது சுமார்-35) ஆகிய இருவரின் குடும்பத்தினருக்கு இழப்பீடாக 07.06.2022 தேதியிட்ட நகர் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண்.83-இன்படி தலா ரூ.15 இலட்சம் வழங்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்பேரில் பணி மேற்கொள்ளும்போது இறந்துபோன ஒப்பந்தத் தொழிலாளர்கள் திரு. நெல்சன் அவர்களின் மனைவி திருமதி. ஜான்சா ஆரோக்கியதாஸ் மற்றும் திரு.வே.ரவிகுமார் அவர்களின் மனைவி திருமதி. புனிதா அவர்களுக்கு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் சார்பில் தலா ரூ.15 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.30 இலட்சத்திற்கான நிவாரணத் தொகைக்கான காசோலையினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் இன்று (08.07.2022) தலைமைச் செயலகத்தில்வழங்கினார்கள்.

இந்நிகழ்வின் போது மாண்புமிகு மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், திரு.மா.சுப்புரமணியம், மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர், திரு.பி.கே.சேகர்பாபு, மாண்புமிகு மேயர், பெருநகர சென்னை மாநகராட்சி, திருமதி.ஆர்.பிரியா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர், திரு.சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., முதன்மை செயலாளர்/ பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர், திரு.ககன்தீப்சிங்பேடி, இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம், முதன்மை செயலாளர்/மேலாண்மை இயக்குநர், மரு.S.சுவர்ணா, இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர், திரு.ஆர்.கிர்லோஷ்குமார், இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர், திரு.ராஜகோபால் சுங்காரா, இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி, துணை ஆணையார் (பணிகள்), திரு.எம்.எஸ்.பிரசாந்த், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி, துணை ஆணையர் (வருவாய் (ம) நிதி), திரு.விஷ்ணு மகாஜன்,

இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய பொறியியல் இயக்குநர், திரு.எம்.ஞானசேகரன் மற்றும் உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

செய்தி வெளியீடு: இணைஇயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்